முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1025

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

20.07.2022, புதன்கிழமை

1. தர்மராஜனே அரங்கா போற்றி
   தவமாக வாழும் தேசிகா போற்றி
   கர்மவினை போக்கி காத்தருள
   கலியுகத்தின் மகா சூட்சுமமாய் வந்த அரங்கனே போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
   புகலுவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 04 நாள், 20.07.2022 புதன்கிழமை)
   ஆற்றல்பட அரங்கனின் மகா சூட்சுமம் வழி
   அகிலமே ஞான மாற்றம் அடைய இருக்க
3. வரங்கள் தந்து யானும் அரங்கனை காத்துவர
   வல்லமைபட அரங்கனை வணங்கினால் போதும்
   வணங்குகின்ற மக்களுக்கு என்னருள் கூடி
   வையகம் ஆறுமுகன் என் தலைமையின் கீழ்வரக்கூடும்
4. கூடவே ஞான ஆட்சிக்காலமும்
   குருஅரங்கன் என் தலைமைகொண்ட மாற்றங்களும்
   ஆறுதலாய் அறுமுகன் யான் கலியில் நடத்த இருக்க
   அரங்கனை நோக்கி உலகோர் வந்தால் போதும்
5. போதுமப்பா இந்த அற்புதம்
   புண்ணிய வடிவில் நடக்கும்
   ஆதரவாய் தர்மவான்கள் பலபேர்கள் ஒன்றிணைந்து அரங்கன் வழிகாட்டலை முழுமையாக்கி
   பேருலகமெங்கும் அற்புதம் பிரணவ சக்திகொண்டு இனிதே நடத்தக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–